# காந்தீயம்

ගාන්ධීයම Gandhеeyam

எனது வாழ்க்கையே எனது செய்தி

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் இரு திங்கள் வெளியீடு

Publication of All Ceylon Gandhi Seva Sangam

Regd No.S.159 0f 25.08.1965

மலர் – 34 இதழ் 01 ஒக்டோபர் – நவம்பர் – 2022 விலை ரூபா 40/=


## சத்தியத்தை மதிக்கக்கூடிய மனிதர்களை உருவாக்க முடியுமாயின் இலங்கைக்கு மறுமலர்ச்சியை மலரச் செய்யலாம்

– விக்டர் ஐவன் –


2017 ஆம் ஆண்டு திரு.விக்டர் ஐவன் அவர்கள் மறுமலர்ச்சி இயக்கம் குறித்து ராவயபத்திரிகையில் எழுதி வந்த கட்டுரைகளை தொகுத்து வெளியிட்ட நூலான "மறுமலர்ச்சிக்கான பாதை" என்ற நூலில் காணப்படும் "மறுமலர்ச்சி இயக்கத்தின் கோட்பாட்டுத் தத்துவமும் நடைமுறையும்" என்ற கட்டுரையிலிருந்து இப்பகுதி நன்றியோடு மீள்பிரசுரம் செய்யப்படுகின்றது. சமகால இலங்கையின் அரசியல், பொருளாதார சூழலில் திரு விக்டர் ஐவனின் எதிர்காலம் குறித்த பார்வை சிறப்பாகப் பொருத்துவதனைக் காணலாம். அவரின் எதிர்வு கூறல்கள் இன்று நம் நாட்டில் நிகழ்ந்தேறி வருகின்றன. அது தவிர மகாத்மா காந்தியின் ஆத்மீக சீடராக விளங்கிய வினோபா அடிகள் சமூகமாற்றத்திற்கான விடயமாகக் குறிப்பிடும் "மூன்றாவது சக்தி" என்ற கோட்பாடும் மறுமலர்ச்சி இயக்கமும் ஒரே இலக்கை நோக்கி சமாந்தரமாக செல்லும் கோடுகள் என்பதை உணர்ந்து கொள்ள முடியும். (ஆ- ர்)

### மறுமலர்ச்சி இயக்கத்தின் கோட்பாட்டுத் தத்துவம்

2009ம் ஆண்டு நிலவிய நீண்டகால யுத்தம் முடிவடையும் போது அதுவரை நாட்டில் நிகழ்ந்துவந்த வன்முறை பேதங்களினால் இலங்கை சமூகத்தைப் போலவே இலங்கை அரசும் பாரிய அளவில் சின்னாபின்னமாகி இருந்தது. சமூகமும் அரசும் கூட அரசின் அனைத்து நிறுவனங்களின் முறைமைகளும் ஊழல் நிறைந்த சீரழிந்து போன நிலைக்கு உள்ளாகியிருந்தது.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 30 ஆண்டுகளைக் கடந்த பின்னரும் மேலும் 30 ஆண்டுகள் அளவிலான காலப்பகுதியில் ஆரம்பத்தில் இடைக்கிடையேயும் பின்னர் தொடர்ச்சியாகவும் நிகழ்ந்து வந்த வன்முறை மோதல் காரணமாக அவலட்சணமான நிகழ்வுகளால் சூழப்பட்ட மரண பயத்தை ஏற்படுத்தக்கூடிய ஒழுக்க சீலமற்ற சூழமைவொன்றிலேயே நீண்டகாலத்திற்கு சமூகம் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தது. மனிதர்களை படுகொலை செய்தல், அவர்களின் விகாரமடைந்த சடலங்களை காட்சிப்படுத்தல், சிலவேளை கொலைச் செய்யப்பட்ட மனிதர்களின் கழுத்துக்களை வெட்டி அவர்களின் தலைகள் தடிளால் குத்தப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டன. சித்திரவதைக் கூடங்கள் போன்றன மிகவும் சாதாரண விடயங்களாக மாறி இருந்தன.

சிங்கள தமிழ் கிளர்ச்சிக் காரர்களின் நடத்தை கொடூரமிக்கதாக இருந்ததோடு அக்கிளர்ச்சியை அடக்குவதற்காக பாதுகாப்பு படையினர் பயன்படுத்திய வழிமுறைகளும் குரூரமானவை. மோதல் நிகழ்ந்த நீண்ட காலப் பகுதியானது நாட்டில் குரூரத்தன்மை அரசோச்சிய பயங்கரமான அவலட்சனமான ஒரு கால கட்டமாகவே இருந்தது எனக் குறிப்பிடலாம்.



சிங்கள தெற்கில் தொடங்கி தமிழ் வடக்கில் முடிவடைந்த வன்முறை மோதல்கள் காரணமாக ஓர் இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் மரணத்தை தழுவியுள்ளனர். மேலும்பெரும் எண்ணிக்கையினர் தாம் வாழ்ந்து வந்த வசிப்பிடங்களை இழந்தனர். சித்திரவதைகளுக்கு உட்பட்டவர்களின் எண்ணிக்கையும் மிகப்பாரியதாகும். பாதுகாப்புக் கருதி நாட்டைவிட்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கையும் இலட்சக்கணக்காகும். வலது குறைந்தோராக மாறியவர்களின் எண்ணிக்கையும் கூட பாரியதாகும்.

இவ்வாறு நீண்டகாலமாக நிலவி வந்த வன்முறை அலை களுக்கு அகப்பட்டு சில விடயங்கள் முழுமையாகவே அழிந்த போது அழியாது எஞ்சிய அனைத்தும் விகாரமடைந்து ஊழலுக்குட்படுத்தப்பட்டு சீரழிந்த நிலைக்கு மாறின. உடலியல் ரீதியாக அழியாமல் எஞ்சிய மனிதர்கள் ஒழுக்க விழுமியங்கள் மற்றும் பகுத்தாயும் அறிவை இழந்து சுயநலமிக்க மூட நம்பிக்கைகளினால் தலையை குப்பையாக மாற்றிக் கொண்ட மனிதர்களாக மாறி இருந்தனர். அதனால் சமூகமும் ஊழல் நிரம்பிய மற்றும் சீரழிந்த நிலைக்கு ஆளாகியிருந்தது.

அத்தகைய அவலட்சணமான மற்றும் பயங்கரமான சமூகப் பின்புலத்தில் சட்டத்தை அமுல் படுத்தக்கூடிய மற்றும் நீதி வழங்க கூடிய நிறுவனங்களும் உள்ளிட்ட அரசின் அனைத்து நிறுவன முறைகளும் ஊழல் மிக்க செயல்திறனற்ற மற்றும் மக்களை நெருக்கீட்டுக்குட்படுத்தக்கூடிய சீரழிந்து போன நிறுவன முறைமைகளாக மாறியிருந்தன. இலங்கை அரசும் வஞ்சம் மிக்கபிறர் துன்பத்தில் இன்பம் காண்கின்ற இரத்தத்தை உறிஞ்சும் மாமிசத்தை உண்ணக்கூடிய அரசாக மாறியிருந்தது.

உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் நாட்டில் இவ்வாறான பாரிய அழிவொன்று ஏற்பட்டது ஏன் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டிய கடமையொன்று ஆட்சியாளர்களுக்கு இருந்தபோதிலும் அதற்கு தேவையான விழிப்புணர்வோ அல்லது பகுத்தாயும் புத்தியோ அவர்களுக்கு இருக்கவில்லை. மரணமடைந்த அனைவரும் ஜேவிபிகாரர்களாயினும் எல் ரீ.ரீ.டிக்காரர்களாயினும் ராணுவ வீரர்களாயினும் அப்பாவி பொதுமக்களாயினும் அனைவரும் இந்நாட்டின் புதல்வர்களும் புதல்விகளுமே என்ற உண்மையை விளங்கிக் கொள்வதற்கு அல்லது சிதைவடைந்து சின்னாபின்னமாகியிருந்த சமூகத்தையும் அரசையும் மீள்புனர் நிர்மாணம்

தொடர்ச்சி 2ம் பக்கத்தில்....

கடமையைச் சரிவரச் செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதலாம் பக்க தொடர்ச்சி...**

செய்யவேண்டிய தேவைப்பாட்டை விளங்கி கொள்வதற்கு தேவையான ஞானம் அவர்களிடம் இருக்கவில்லை.

முதலாளித்தவ முறைக்கு மாறியதன் பின்னர் உருவாகின்ற தேசிய அரசின் நல்லிருப்புக்கு தவிர்க்க முடியாத காரணியான நவீன இலங்கையரென்ற நவீன தேசியத்தை கட்டியெழுப்பத் தவறியமையே நாட்டில் ஏற்பட்ட பாரிய அழிவின் மீது தாக்கம் செலுத்திய பிரதானமான காரணியாக குறிப்பிடலாம்.

நவீன பரிபாஷையியல் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்போர் இனக்குழு மக்களாகவே ஒழிய தேசிய இனங்களாக கருதப்படுவதில்லை. நவீன கண்ணோட்டத்தில் தேசிய இனமாக கருதப்படுவது தேசிய அரசின் கீழ் வாழ்கின்ற அனைத்து இனங்கள் , சாதிகள் மற்றும் மதங்களுக்கு உரித்தான அனைத்து மக்களையும் ஆகும். ஆனால் ஐரோப்பிய நாடுகளைப் போலல்லாது இலங்கை போன்ற காலனித்தவ நாடுகளில் தேசியம் இயல்பாக ஏற்படும் ஒன்றல்ல மாறாக கட்டியெழுப்பபட வேண்டிய சிக்கலான விடயம் ஒன்றாகும்.

தேசத்திற்கு சொந்தமான மக்கள் மத்தியில் காணக்கூடிய சாதிகள், இனங்கள், மதங்களினால் உருவாகியுள்ள உயர்வு தாழ்வு ஏற்றத்தாழ்வுகளை இல்லாதொழித்து அவர்கள் அனைவரையும் சமமான உரிமைகள் மற்றும் சமமான மானிட கௌரவம் உள்ளவர்களாக மாற்றுவதன் மூலமே தேசியத்தைக் கட்டியெழுப்பக்கூடியதாக இருக்கும்.

சாதியை அடிப்படையாக கொண்ட உயர்வு தாழ்வு ஏற்றத் தாழ்வொன்று காணப்படும் போது அவ்வுயர்வுதாழ்வு ஏற்றத்தாழ்வை இல்லாதொழித்து அனைவரையும் சமமான மானிட கௌரவம் பெற்ற மனிதர்களாக மாற்றியமைக்க வேண்டும். இன மற்றும் மத அடிப்படையிலான பிரிவினைகளின் போது அனைத்து இனங்கள் மற்றும் மதங்களை சமமான கௌரவத்தையும் சமமான உரிமைகளையும்பெற்று சகவாழ்வுடன் செயற்படக்கூடிய இனங்களாக மதங்களாக மாற்றவேண்டும். தேசியம் என்பது அரசியல் யாப்பினால் கட்டியெழுபகூடிய ஒன்றல்ல என்பதோடு அதனை பலமான கருத்தியல் போராட்டமொன்றில் ஊடாகவே கட்டியெழுப்பட வேண்டியுள்ளது. அவ்வாறு கட்டியெழுப்பபடுகின்ற தேசியம் சட்ட ரீதியான அடிப்படையொன்றை வழங்குவதையே அரசியல் சட்டயாப்பினால் செய்யக்கூடியதாக உள்ளது.

இந்தியாவிலே சுதந்திரத்திற்காக போராடிய தலைவர்களுக்கு மாற்றமாக இலங்கையில் சுதந்திரத்திற்காக போராடிய தலைவர்களுக்கு தேசிய அரசு பற்றியோ அல்லது அத்தேசிய அரசனின் நல்லிருப்புக்கு அவசியப்பாடான தேசியம் பற்றியோ சரியான தெளிவொன்று இருக்கவில்லை. இந்திய தலைவர்கள் இந்திய சுதந்திர போராட்டத்தினுள் "இந்தியர்கள் என்ற தேசியத்தை" கட்டியெழுப்பினர். ஆனால் அவ்வாறான ஒன்று இலங்கையில் நடைபெறவில்லை.

சுதந்திரம் கிடைப்பதற்கு நெருங்கியிருந்த காலப் பகுதியில் கிடைக்கப்போகும் சுதந்திரம் குறித்து உருவாக்கி கொண்ட பலத்த சந்தேகமொன்று சிறுபான்மை தலைவர்களிடம் போலவே ஒதுக்கப்பட்ட சாதிகளின் தலைவர்களிடம் காணப்பட்டது. சுதந்திரம் கிடைத்த பின்னர் சிங்கள பெரும்பான்மை இனத்திற்கு பெரும் அரசியல் ஆதிபத்தியமொன்று கிடைக்கப்பெற்று சிறுபான்மை இனங்களை ஒடுக்ககூடிய நிலைமையொன்று ஏற்படலாம் என்ற அச்சம் சிறுபான்மை தலைவர்களிடம் காணப்பட்டது. சுதந்திரம் கிடைத்த பின்னர் கொவிகம மற்றும் வெள்ளாள சாதியினருக்கு பெரும் ஆதிபத்தியமொன்று கிடைத்து தங்களை ஒடுக்கக் கூடிய நிலையொன்று ஏற்படலாம் என்ற பயமும் ஒடுக்கப்பட்ட சாதி தலைவர்களுக்கு இருந்தது. மேற்படி இரு தரப்பு தலைவர்களும் தனித்தனியாக முதலில் டொனமூர் ஆணைக்குழுவிற்கு இரண்டாவதாக சோல்பரி ஆணைக்குழுவிற்கு சென்று தமக்குள் ஏற்பட்டுள்ள அச்சம் மற்றும் சந்தேகம் குறித்து இரண்டு ஆணைக்குழுவிடமும் முறைப் பாடு செய்தனர். அவ்வாணைக்குழுவினால் அவர்களுக்கு அவர்களின் மனக்குறைகளுக்கு போதியளவில் தீர்வுகள் கிடைக்கவில்லை.

இலங்கையானது இலங்கையரென்ற தேசியத்தை கட்டியெழுப்பாமலேயே சுதந்திரம் பெற்றுக் கொண்டது, சுதந்திரம் கிடைத்த பிறகும் தேசியத்தை கட்டியெழுப்பவில்லை. அதனால் சிறுபான்மையினருக்கு, ஒடுக்கப்பட்ட சாதியினருக்கு, சிறுபான்மை மதங்களைச் சார்ந்த மக்கள் மத்தியில் காணப்பட்டு வந்த முறுகல் நிலையானது தீர்வின்றி விடப்பட்டு வந்துள்ளது. அதிகாரத்தில் அமரும் அரசாங்கமும் நேரடியாகவும் மறைமுகமாகவும் அவர்களை ஒடுக்கி வந்தனர். அதன் காரணமாக வளர்ச்சி கண்டு வந்த முறுகல் நிலை ஆரம்பத்தில் காலத்துக்குக் காலம் உருவாகும் கலவரங்களாக வெளிப்பட்டு பின்னர் நீண்ட வன்முறை மோதல்களாக உருவெடுத்து இலங்கை பாரியளவில் இரத்தம் சிந்தும் நாடக மாறியது.

அவ்வாறு சிங்கள மற்றும் தமிழ் பிரதேசங்களில் ஏற்பட்ட வன்முறை மோதல்களுக்கு இனம், குலம், மதம் என்ற காரணிகள் செல்வாக்கு செலுத்தின. வடக்கில் தமிழர்களின் கிளர்ச்சியில் சிங்கள விரோதம் உள்ளீடாக இருந்ததோடு தெற்கு சிங்கள கிளர்ச்சி இரண்டிலும் தமிழர் விரோதப் போக்கு உள்ளீடாக இருந்தது. அவ்வாறே மேற்படி அனைத்து சிங்கள தமிழ் கிளர்ச்சிகளிலும் ஒடுக்கப்பட்ட சாதி என்ற காரணியும் உள்ளீடாகக் காணப்பட்டது. தமிழர் கிளர்ச்சி மற்றும் அதனை அடக்கும் போதும் தமிழர்களுக்கு மிகப் பாரிய பாதிப்பொன்று ஏற்பட்டதைப் போலவே அந்த சிங்கள தமிழ் கிளர்ச்சிகள் இரண்டிலும் அதிகமானஒடுக்குமுறைக்குட்பட்டவர்கள் சிங்கள தமிழ் ஒடுக்கப்பட்ட சாதிகளை சேர்ந்தவர்களே.

ஏற்பட்ட இப்பாரிய நெருக்கடி நிலையை புரிந்து விளங்கி வன்முறை மோதல்கள் ஏற்பட்டதற்கான காரணிகளுக்கு பரிகாரம் கண்டு அம்மோதலின் காரணமாக சீரழிந்து போயுள்ள சமூகத்தையும் அரசையும் மீள்புனர்நிர்மாணம் செய்யக் கூடிய நிகழ்ச்சித் திட்டத்தைத் தவிர இந்நெருக்கடியை வெற்றி கொள்ளும் ஆற்றல் இந்த நாட்டிற்கு கிடையாது.

மேற்படி யதார்த்தத்தை புரிந்துகொள்வதில் உள்நாட்டு யுத்தத்தை வெற்றிகொண்ட தலைவரும் தோல்வி கண்டார். அதன் பின்னர் அதிகாரத்தில் அமர்கின்ற தலைவர் களும் அந்த யதார்த்தத்தை அறிந்து விளங்கி தேவையான தீர்வுகளை வழங்குவதில் தோல்வி கண்டுள்ளனர். இவற்றின் இறுதி விளைவாக அமைந்துள்ளது நாடு அராஜகத்தை நோக்கி இழுத்துச் செல்லப்படக்கூடிய நிலையொன்றே.

மறுமலர்ச்சி இயக்கத்தின் நோக்கம் அராஜக நிலையொன்று ஏற்படுவதனால் வரக்கூடிய பாதிப்புக்களை குறைப்பதோடு நாட்டிற்கு மறுமலர்ச்சியை மலரச் செய்வதற்கு அவசியப்படக்கூடிய அறிவு சார் சமூகச் சூழலொன்றை ஏற்படுத்துவதாகும்.

மறுமலர்ச்சி இயக்கம் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு முட்டிமோதக்கூடிய இன்னுமொரு அரசியல் இயக்கமாக மாறுவதனை எதிர்ப்பார்க்கவில்லை. அதற்குப் பதிலாக பொதுமக்களை வலையமைப்பாக அணிதிரட்டி அவர்களுக்கு கற்கை நெறியொன்றை வழங்கி இலங்கையரென்ற தேசியத்தை கட்டியெழுப்புவதற்கு முடியுமாகும் வகையில் ஊழல் மிகுந்த மற்றும் சீரழிந்த நிலையிலுள்ள சமூகத்தையும் அரசையும் மீண்டும் மீள்புனர் நிர்மாணம் செய்வதற்கான ஆற்றலை வழங்கக்கூடிய அறிவு சார் சமூகச் சூழலொன்றை ஏற்படுத்துவதாகும்.

மறுமலர்ச்சி இயக்கத்தின் ஆகக் குறைந்த எண்ணிக்கையினர் பத்து இலட்சமாகும்.

நீண்டகாலமாக நிலவி வந்த வன்முறை மோதல்கள் காரணமாக சிங்கள தமிழ் முஸ்லிம்களின் இதயங்களில் ஏற்பட்டுள்ள காயங்களை குணப்படுத்தி குலபேதம், இன

(5ம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

காந்தி ஆண்டு 153, ஒக்டோபர் - நவம்பர் 2022



**மனிதனாக இருப்பது அல்ல மனிதம், மனிதாபிமானத்துடன் இருப்பதே மனிதம்**

-மகாத்மா காந்தி-

## பட்டினிச் சாவை தடுத்து நிறுத்த ஒன்றிணையுங்கள்

இலங்கை வரலாற்றில் என்றுமில்லாத பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட காலப்பகுதி சமகாலமாகும். பொருளாதார நெருக்கடி ஏற்படப்போவது குறித்து இலங்கை ஊடகங்கள் செய்திகளைத் தருவதற்கு முன்பே இந்தியப் பத்திரிகைகள் குறிப்பாக தினத்தந்தி இது குறித்த ஆபத்தை விளக்கியிருந்தது. இலங்கையில் வாழ முடியாத நிலையில் படகுகள் மூலம் இந்தியாவின் இராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடி நோக்கிச் சென்ற இலங்கை அகதிகள் அங்கு தஞ்சமடைவதும் தங்கள் நிலைமையை விளக்கி பொலிசாரிடம் சரண் அடைவதும் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக நிகழ்ந்து வரும் சம்பவங்களாகும்.

இவ்வாறான பொருளாதார நெருக்கடி நிலை இலங்கையில் ஏற்படுவதற்கு ஊழல், நிர்வாகத் திறனின்மை, உள்நாட்டு யுத்தம், சுனாமி போன்ற இன்னோரன்ன காரணிகள் குறிப்பிடப்பட்டாலும் உலகளாவிய ரீதியில் தொற்று நோயாக பல்லாயிரக்கணக்கான உயிர்களைக்காவு கொண்ட கொரோனாவும் இதில் தாக்கத்தைச் செலுத்தியது.

உலகளவில் ஏற்பட்ட இந்த ஸ்தம்பித நிலைக்கு கொரோனா மற்றும் ரஷ்ய உக்ரைன் போர் நெருக்கடியால் உலக விநியோக சங்கிலியில் ஏற்பட்ட இந்த தடை பிரதான காரணமாக அமைவதாக இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி ஷங்காய் ஒத்துமைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் தெரிவித்த கருத்து ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டிய தொன்றாகும். அதன் தாக்கம் இலங்கையிலும் உணரப் பட்டுக் கொண்டிருக்கிறது.


இது போன்ற தொரு உணவு நெருக்கடி ஐம்பது களிலும் ஏற்பட்டது. அன்று உணவுத் தேவையை நிறைவு செய்வதற்கு உள்நாட்டு உற்பத்திகளைப் பெருக்குவதில் கவனம் செலுத்தப்பட்டது. காய்கறி, பழங்கள், கிழங்கு வகைகளை உற்பத்தி செய்து மாற்று உணவாகப் பயன்படுத்தும்போது அரிசிக்கான தேவையை குறைத்துக் கொள்ளமுடியும். இதன் மூலமாக சில காலத்திற்கு அரிசியைச் சேமிக்கமுடியும். மக்களும் உணவுப்பழக்கங் களில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். ஒரு ஆரோக்கியமான உணவுத்தட்டில் காபோவைதரேற்று அதாவது மாப்பொருள் சிறியபங்கையே பிடிக்கின்றது. பெரும் பகுதியை புரதம் விட்டமின்கள், கனியுப்பு க்கள் போன்ற ஏனைய சத்துபொருள்களே வகிக்கின்றன. அதுவே மனிதனின் ஆரோக்கியமான வாழ்வுக்கும் உகந்தது ஆகின்றது.


இலங்கையின் ஜனாதிபதி விவசாய உரங்களைத் தடை செய்தபோது உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. இது எதிர்மறையான விளைவுகளை உருவாக்கும் என்று ஏற்கனவே பல்வேறு தரப்பினராலும் எச்சரிக்கப்பட்டிருந்தது நஞ்சற்ற நாட்டை உருவாக்குவது ஜனாபதியின் இலக்காகக் காணப்பட்டது. எனினும் எதிர்பார்த்த மாற்றங்களை அதனால் அடைய முடியவில்லை. நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டதன் விளைவாக விவசாயம், கடற்றொழில் ஏனைய கைத்தொழில் துறைகள் முடங்கிப் போயுள்ளன. இதனால் தொழிலாளர் களும், நடுத்தர வர்க்கமும் பட்டினி நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளன.

இந்த நிலையில் விரைவான நடவடிக்கை இல்லையெனில் ஒக்டோபர் முதல் ஏப்ரல் வரை சிறிலங்கா சிக்கலில் சிக்கும் என உலக உணவுத் திட்டம் எச்சரிக்கை செய்துள்ளது. உலகில் பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளை உள்ளடக்கி வரை படம் ஒன்று உலக உணவுத் திட்டத்தால் தயாரிக்கப்பட்டு உள்ளது. அதற்கு அமைய சிறிலங்காவின் மேல், மத்திய, சபரகமுவ, ஊவா, தெற்கு மற்றும் வடமேல் மாகாணங்கள் உணவு அபாய வலயங்களாக இனங்காணப்பட்டுள்ளன. அதே நேரம் இலங்கை மக்களின் சனத்தொகையில் 63 இலட்சம் மக்கள் உணவுப்பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் என உலக உணவுத்திட்டம் அறிவித்துள்ளது. அத்தியாவசிய பொருட் களின் விலை அதிகரிப்பால் 60 சதவீதமாக மக்கள் போஷாக்கு குறைந்த உணவையே உட்கொள்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

காந்திய பொருளாதார அடிப்படையில் விவசாயத்தில் நாடு தன்னிறைவு அடையவேண்டும். அதற்கு ஒவ்வொரு இல்லத்திலும் வீட்டுத்தோட்டம் இடம்பெற வேண்டும். இயலக்கூடிய அனைவரும் விவசாய உற்பத்தியில் கவனம் செலுத்தவேண்டும். அவ்வாறான ஒரு மாற்றத்தினாலேயே இலங்கையில் பட்டினிச் சாவை தடுத்து நிறுத்த முடியும்.

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி
ஆசிரியர்.






அகில இலங்கை காந்திசேவா சங்க நிர்வாகிகள் யாழ் இந்திய துணைத் தூதரக அதிகாரியுடன் எடுத்துக் கொண்ட படம்

அகில இலங்கை காந்திசேவா சங்கத் தலைவர் திரு.சோ.க. தம்பிப்பிள்ளை அவர்கள் திரு. விக்டர்ஜவனுடன் எடுத்துக் கொண்ட படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தியை கொச்சைப்படுத்தி பணம் சேர்க்கவேண்டுமா?

## தமிழ் சினிமா குறித்து தமிழருவி மணியன் வேதனை



காந்தியை கொச்சைப் படுத்தி பணம் சேர்க்க வேண்டு மா? என்று " மகான் " திரைப்படம் குறித்து தமிழருவி மணியன் தெரிவித்து ள்ளார்.

**சக்திமிக்க ஊடகம்**

காந்திய மக்கள் இயக்கத்தின் தலைவர் தமிழருவி மணியன் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது.

கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் விக்ரமும் அவரது மகனும் இணைந்து நடித்துள்ள "மகான்" படத்தை நான் பார்க்கவில்லை. இந்த படம் காந்தியத்தை கொச்சைப் படுத்தப்படுவதாக அறிவார்ந்த பலர் என்னிடம் சொல்லி மனம் வருந்தினர். சினிமாவை போன்று சக்தி மிக்க ஊடகம் உலகத்தில் வேறு எதுவுமில்லை. படிப்பறியா பாமரனையும் எளிதில் சென்றடையும் ஆற்றல் சினிமாவுக்கு மட்டுமே உண்டு.

கடைசி கிராமத்து மனிதனையும் பெரிதாக பாதிக்கும் ஆற்றல் மிக்க இந்த சினிமா உலகம் சமூக பொறுப்பற்று இயங்குவது தான் மிகவும் கவலைக்குரியது.

உயர் ஒழுக்கங்களையும், நற்பண்புகளையும், புலனடக்கத்தையும், சக மனிதர்களின் நலன் குறித்த சிந்தனைகளையும் சமத்துவத்தையும் பெரிதாக போற்றி வாழ்பவர்களே காந்தியை பின்பற்ற முடியும். காந்தி அரசியல்வாதிகளுக்கு இடையே ஒரு துறவியாகவும், துறவிகளுக்கு இடையே ஓர் அரசியல்வாதியாகவும் வாழ்ந்தவர்.

**மகா விரதங்கள்**

சத்தியம், அகிம்சை, பிரம்மச்சரியம், திருடாமை, உடைமையின்மை, உடல் உழைப்பு, நாவடக்கம், அஞ்சாமை, சமய ஒற்றுமை, சுதேசி, தீண்டாமை ஒழிப்பு ஆகிய 11 மகா விரதங்களை வலியுறுத்துவது தான் காந்தியம். இவற்றுள் எந்த ஒன்றையும் ஏற்றுநடக்க இன்றைய இளைய தலை முறையில் பெரும்பாலானவர்கள் மனதளவில் கூட தயாராக இல்லை.

காந்தி வலியுறுத்திய கொள்கைகளில் மதுவிலக்கு என்பது மிகவும் முக்கியமானது. மதுவிலக்குஎன்பது காந்தியத்தின் உயிர்த்தலம். "பிதாமகன்" சேது, காசி போன்ற படங்களில் தன் அளப்பரிய நடிப்பாற்றலை வெளிப்படுத்திய விக்ரம் இந்த படத்தில் நடிக்க இசைந்திருக்கலாமா?

**ஆழ்ந்த வருத்தம்**

"பாகப்பிரிவினை" பார்த்தேன். அது கூட்டு குடும்பத் தின் சிறப்பை சொல்லி கொடுத்தது. "பாசமலர்" பார்த்தேன் அது சகோதர பாசத்தின் மேன்மையை உணர்த்தியது. "பாலும் பழமும்" பார்த்தேன். அது கணவன் - மனைவியின் ஆன்மநேய கலப்பை அறிமுகப்படுத்தியது. "பாவ மன்னிப்பு" சமய நல்லிணக்கத்தை பாடமாக போதித்தது. மகான் படம் எடுத்தவர்களுக்கும், மராட்டியத்தில் கோட்சேயை வழிபடு நாயகனாக வடிவமைத்து நாடகம் நடத்துபவர்களுக்கும் பெரியவேற்றுமை இல்லை.

தமிழக மக்களிடம் சினிமாவுக்குள்ள மிகப்பெரும் செல்வாக்கையும், ரஜினிகாந்துக்கு இருந்த அளவற்ற ஆதரவையும் நான் விரும்பிய நல்ல அரசியலுக்கு பயன்படுத்த விரும்பினேன். முள்ளை முள்ளால் எடுப்பதும், வைரத்தை வைரத்தால் அறுப்பதும்தானே நம்முன்னோர் பயன்படுத்திய முறை! அந்த முயற்சி தோற்றுபோனதில் எனக்கு ஆழ்ந்த வருத்தம் உண்டு.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# இங்கிலாந்து பிரதமர் இந்தியா வந்தார்

## சபர்மதி ஆசிரமத்தை சுற்றி பார்த்தார்

*குறிப்பு: போரிஸ் ஜான்சன் பிரதமராகப் பதவி வகித்த போது கடந்த ஏப்ரல் மாதம் நடந்த நிகழ்வு இதுவாகும். தற்போது இங்கிலாந்து பிரதமராக லிஸ்ட்ரஸ் பதவி வகிப்பது குறிப்பிடத்தக்கது.*

இங்கிலாந்து பிரதமர்போரிஸ் ஜான்சன் 2 நாள் பயணமாக இந்தியா வந்தார். அவர் சபர்மதி ஆசிரமத்தை சுற்றி பார்த்து மகாத்மா காந்தியின் நூல் நூற்றராட்டையை சுழற்றி மகிழ்ந்தார்.

**இங்கிலாந்து பிரதமர்**


இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் 2 நாள் பயணமாக இந்தியா வந்தார் இங்கிலாந்து பிரதமராக பொறுப்பேற்ற பின்னர் போரிஸ் ஜான்சன் இந்தியா வருவது இதுவே முதல்முறையாகும். இங்கிலாந்தில் இருந்து தனி விமானம் மூலம் குஜராத் மாநிலம் ஆமதாபாத் விமான நிலையத்திற்கு அவர் வந்தார். போரிஸ் ஜான்சனை குஜராத் மாநில கவர்னர் ஆச்சாரியா தேவ்ரத், முதல் - மந்திரி பூபேந்திர பட்டேல் உள்ளிட்டோர் விமான நிலையத்திற்கு நேரில் சென்று வரவேற்றனர்.

**புத்தகம் பரிசு**

போரிஸ் ஜான்சன் முதலில் ஆமதாபாத்தில் உள்ள சபர்மதி ஆசிரமத்தை சுற்றி பார்த்தார். அங்குள்ள மகாத்மா காந்தியின் உருவப்படத்துக்கு அவர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். ஆசிரமத்தில் காந்தி பயன்படுத்திய பொருட்களை வியப்புடன் பார்த்தார். அங்கு வைக்கப்பட்டிருந்த மகாத்மா காந்தி நூல் நூற்ற ராட்டையில் போரிஸ் ஜான்சன் நூல் நூற்றி சுற்றி மகிழ்ந்தார். அப்போது ராட்டை குறித்து அவருக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

அவருக்கு சபர்மதி ஆசிரமம் சார்பில் தொடக்கத்தில் காந்தி எழுதிய புத்தகமான 'கைடு டூ லண்டன்' என்ற புத்தகமும் காந்தியின் சீடர்களின் ஒருவரான மேடலின் சிலேடு எழுதிய 'திஸ்பிரிட்ஸ் பில்கிரிமேஜ்' என்ற புத்தகமும் பரிசாக வழங்கப்பட்டது.

**காந்தியின் கொள்கை**



இதையடுத்து, சபர்மதி ஆசிரமத்தில் போரிஸ் ஜான்சன் செய்திக்குறிப்பு ஒன்றை எழுதினார் அதில் "இந்த அசாதாரண மனிதரின் ஆசிரமத்திற்கு வருகை தந்தது மக்களை அவர் எவ்வாறு அணி திரட்டினார் என்பதை புரிந்து கொள்வதற்கு ஒரு மகத்தான பாக்கியமாக அமைந்தது" என்று போரிஸ் ஜான்சன் குறிப்பிட்டார்.

பின்னர் ஆமதாபாத்தில் முதலீடுகள் மற்றும் வர்த்தக விவகாரங் கள் குறித்து தொழில் அதிபர் கவுதம் தொனி மற்றும் பல்வேறு தரப்பின ருடன் போரிஸ் ஜான்சன் பேசினார். ஆமதாபாத்தில் உள்ள பல்கலைக் கழகத்திற்கு சென்று சில கலாசார இடங்களையும் பார்வையிட்டார்.

**மோடியுடன் சந்திப்பு**

ஆமதாபாத் பயணத்தை முடித்துக்கொண்டு போரிஸ் ஜான்சன் டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்க உள்ளார். போரிஸ் ஜான்சன் மோடி இடையேயான சந்திப்பின் போது இருநாடுகளுக்கு இடையே வர்த்தகம், பாதுகாப்புத்துறை உள்ளிட்ட பல்வேறு விவகாரங் களில் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்து ஆலோசிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உக்ரைன் மீதான ரஷியாவின் போர் குறித்தும் இருநாட்டு தலைவர்களும் பேசுவார்கள் என்று தெரிகிறது. உக்ரைன் விவகாரத்தில் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளால் அறிவிக்கப்பட்ட பொருளாதார தடையில் இந்தியா சேர வேண்டியதன் அவசியம் குறித்து பிரதமர் மோடியிடம் பிரதமர் போரிஸ் ஜான்சன் வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. டெல்லியில் போரிஸ் பல்வெறு தொழில் அதிபர்களையும் சந்தித்து பேச உள்ளார்.

**நன்றி: தினத்தந்தி 22.04.2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லா மக்களும் படிக்கவேண்டிய நூல் "கிராம சுயராஜ்யம்"

இன்றும் நமது தாய்த்திருநாடு கிராம இந்தியாவாகத் தான் இருக்கினறது. "இந்தியா கிராமங்களில் வாழ்கின்றது" என்ற காந்தியடிகளின் கருத்து இன்றைக்கும் நூற்றுக்கு நூறு உண்மையாக இருப்பதைக் காண்கின்றோம்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி பற்றி பல்வேறு வகையான கொள்கைகளும் கருத்துக்களும் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை வளர்ச்சி பெற்ற நாடுகளின் சூழ்நிலைக்கேற்ப உருவாக்கப் பெற்றவை. நமது நாட்டின் சூழ்நிலைக்கு அவை எந்த அளவிற்கு ஒத்து வரும் என்பது கேள்விக்குரியதாகும்.

நமது நாட்டில் ஏறத்தாழ எழுபது சதவிகித மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். இந்தியக் கிராமங்களின் பின்புலமும், இயல்புகளும் தனிவகையானவை. இங்குள்ள சிக்கல்களும், செயல்படும் சக்திகளும் வேறு வகையானவை. இங்கு மேலை நாட்டு வளர்ச்சி முறைகளைப் பின்பற்றினால் எதிர்பார்க்கும் விளைவுகள் ஏற்படாது.

காந்தியடிகள், எல்லோரும் இன்புற்று வாழ்கின்ற ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க விரும்பினார். அந்த சமுதாயம் எப்படி இருக்க வேண்டுமென்பது பற்றி தெளிவான, தீர்க்கமான கருத்துக்களைக் கொண்டிருந்தார். தனது இலட்சிய சமுதாயத் தை முதலில் நமது நாட்டில் உருவாக்கக் கருதினார். அண்ண லின் நிர்மாணத் திட்டங்கள் இந்த நோக்கில் உருவானவையே.

இந்தியாவில் அமைகின்ற ஒப்பிலாத சமுதாயத்தின் அடிப்படையாக கிராமங்கள் இருப்பதை உணர்ந்த காந்தியடி கள், கிராம வளர்ச்சியைப் பற்றி தொடர்ந்து எழுதியும் பேசியும் வந்தார். அவரது கருத்துக்கள் எல்லாம் அவரது நடைமுறை அனுபவத்தைச் சார்ந்து உருவானவை. அவரைப் போன்று சமுதாயவளர்ச்சிக் கருத்துக்களில் சோதனைகள் செய்து சாதனைகள் புரிந்தவர்கள் வேறு யாரும் இல்லை என்று கருதலாம்.

நமது நாட்டில் விடுதலைக்குப் பிறகு விரைந்து முன்னேற்றம் காண சமுதாய வளர்ச்சித் திட்டத்தைச் (Community Development programme) செயல்படுத்திய பொழுது வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டவர்களுக்கு வழிகாட்ட நூல்கள் தேவைப் பெற்றன. அப்பொழுது காலத் தேவையை நிறைவேற்றும் வகையில் காந்திய அறிஞர் எச். எம். வியாஸ் முயன்று அண்ணலின் கருத்துக்களை முறைப்படுத்தி தொகுத்து "கிராம சுயராஜ்யம்" என்ற நூலாக வெளியிட்டார்.

பொதுவாக கிராம வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டவர் களும், குறிப்பாக கிராம வளர்ச்சித் திட்டங்களைத் செயற்படுத்து கின்றவர்களும் தெரிந்து கொள்ள வேண்டிய கருத்துக்களின் சுரங்கமாக இந்நூல் திகழ்கின்றது.

தமிழக அரசின் ஊழியர்களின் தேர்வுக்குரிய நூலாகவும் இது அமைந்திருக்கின்றது.

காந்தியத் தொகுதிகளில் ஒன்றாக முன்பு வெளிவந்த நூல், இப்பொழுது தனி நூலாக உங்கள் கைகளில் தவழ்கின்றது. இந்நூலின் உள்ளடக்கக் கருத்துக்கள் எல்லாம் நமது கல்வியில் இடம் பெற வேண்டியவை. குறைந்த அளவில் பட்ட வகுப்பு மாணவர்களாவது இவற்றைத் தெரிந்திருந்தால் அவர்களது வாழ்க்கை நோக்கில் வரவேற்கத்தக்க மாறுதல் ஏற்படலாம். நமது நாட்டுக் கல்வியாளர்கள் இதனைப் பற்றி எண்ணிப்பார்க்கலாம்.

பல நூல்களை ஒரு முறை படித்தால் போதும், சில நூல்களை மறுபடியும், மறுபடியும் படிக்கவேண்டும். அப்படிப்பட்ட நூல்களில் ஒன்றுதான் இந்நூல்.

எல்லா வகையான மக்களும் படிக்க வேண்டிய நூல் என்பதால் அதற்கேற்ற முறையில் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றோம்.

எல்லா நூலகங்களிலும் இருக்க வேண்டியது இந்நூல்.


**மதுரை 31-12-2011** **காந்திய இலக்கியச் சங்கம்**

**2ம் பக்கத் தொடர்ச்சி...**

பேதம், மத பேதங்கள் அற்ற, மூடநம்பிக்கைகளில்லாத, விஞ்ஞானபூர்வமாகவும் தர்க்கரீதியாகவும் பன்மைத்துவ ரீதியாகவும் சிந்திக்கக்கூடிய மனிதர்கள் பத்து இலட்சம் பேரை உருவாக்க முடியுமாயின் இலங்கைக்கு மறு மலர்ச்சியை மலரச் செய்யலாம் என மறுமலர்ச்சி இயக்கம் நம்புகிறது. ஒழுங்கு படுத்தப்பட்ட பத்து இலட்சம் பேருக்கு ஏனைய மனிதர்கள் மீது செலுத்தமுடியுமான செல்வாக்கு மிகப்பாரிய தாகும். அவ்வாறானதொரு சமூக சூழ லொன்றை ஏற்படுத்தினால் உயர்பீடமும் அதற்கேற்ப மாற்ற மடையும் அல்லது அதனை மாற்றி அமைக்கலாம்.

அதன் மூலமாக மறுமலர்ச்சி இயக்கம் முயற்சிப்பது பழைய சமூகத்தினுள்ளே அதற்கு நேர் எதிரான சிறந்த முன்னேற்றகரமான மாற்றுச் சமூகமொன்றை கட்டி யெழுப்புவதற்கேயாகும்.

அதனை நோக்கிச் செல்லும் கடினமான சிக்கல் நிறைந்த பயணத்தில் மனிதர்களின் வாழ்வில் ஏற்படும் மலர்ச்சிஆனது விஞ்ஞானம், கலை மற்றும் அரசியல் முதலான அனைத்துத்துறைகளிலும் புதிய படைப்புக்கள் மற்றும் புத்தாக்கங்களை உருவாக்குவதற்கு காரணமாக அமையும் என மறுமலர்ச்சி இயக்கம் நம்பிக்கை கொள் கின்றது. தேசிய நவீன அரசு மற்றும் நவீன சமூகம் கட்டியெழுப்பப்படுவ தானது பல இலட்சக்கணக்கான மக்கள் மத்தியில் ஆக்கபூர்வமாக முன்னெடுக்கப்படும் உரையாடலிலேயே தங்கியுள்ளது.



மகாத்மா காந்தியின் சிரார்த்த தின நிகழ்வு 30.01.2022 இடம்: அரியாலை காந்தி சனசமூக நிலையம்



மகாத்மா காந்தியின் சிரார்த்த தின நிகழ்வு 30.01.2022 இடம்: யாழ் ஆஸ்பத்திரி வீதி காந்தி சிலையடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் எம்மவர் நினைவில் .... மகாத்மா

மனித சமூகம் ஒற்றுமையுடன் இணைந்து சமத்துவம் பேணி, ஏற்றத்தாழ்வு இன்றி வாழவேண்டும் என்று தனது தாய் நாட்டிற்கு கற்றுத்தந்தவர் காந்தியடிகள். அவரின் ஜெயந்தி தினத்தில் பெரியவரிற்கு மதிப்பளிப்பதை, நினைவுகளை மீட்பதை, அவரது சிந்தனைகளை பகிர்வதை நாம் புரிகிறோம். எனினும் எமது மனங்களில் நற்பண்புகளும், நல்லியல்புகளும் குடிகொண்டு உள்ளனவா? என்பது சற்றே சிந்திக்க வேண்டியது.

புதுயுகம் கண்டு, நாகரிக உலகிற்கு பழக்கப்பட்டு, பொருளாதார வசதிகள் பெற்றிருப்பினும் மனித மனம், நேயம், சகோதரத்துவம், மானிடம், மன அமைதி அமைகிறதா? முன்னைய காலங்கள் எத்தனை நல்வாழ்வை அளித்ததை நாம் மறக்கத்தான் முடியுமா?

இந்திய மக்களின் , அயல் நாடுகளின், எம் தாய் நாட்டின் வரலாறுகளில் தடம் பத்தித்தவர்கள் பலர். காந்தியடிகள் சமூகத்துடன் இயைந்து வாழ்ந்தவர். அவரது கருத்துக்களை மதித்து பின்பற்றியவர்கள் பலர். இவரிற்கு தொண்டிலே இருந்த ஆர்வம் அளவற்றது. சமயநெறியில் உறுதி கொண்டவர். உண்மையை கடவுளாகப் போற்றியவர். சமயம் என்பது சில குறியீடுகளோ, வெறும் சடங்குகளோ. சொற்களால் கூறப்படுபவையோ, நூல்கள் என்றோ அவர் நம்பவில்லை. இன்னா செய்யாமை என்னும் அறத்தையே அவர் சமய நெறியாகக் கொண்டார்.

என்றும் தனது சமூக பணிகளில் இருந்து ஒதுங்க வில்லை. உலக ஈடுபாடு மிக்கவர், போராட்டங்களிற்கு துணிந்த வர், சவால்களை ஏற்றுக் கொள்பவர், பிறர் மனங்களை பெரிதும் மதித்தவர், இன்சொல் பேசுபவர், புண்படுத்தாது பேசுபவர், "மௌனம்" காத்து அன்பை பெரிதும் போற்றுபவர் எளிமையான தோற்றம் கொண்டவர். மனிதன் தன் வாழ்வில் உணவை பெரிதும் நாடுவது போல் உழைப்பை கட்டாயமாக புரியவேண்டும். தியாகம், நேரகட்டுப்பாடு, முகாமைத்துவம், கூட்டுப்பிரார்த்தனை என்ற சிறந்த பண்புகளை கடைப்பிடிப்பவர்.

பல விமர்சனங்களிற்கு உட்பட்டவர். இந்திய நாட்டின் அரசியல், நிர்வாக, சுதந்திர போராட்டங்களை மேற்கொள்ளும் வேளைகளில் அக்கால தேசிய பெரியவர்கள், வீரர்களுடன் பல கருத்துக்களை பேசியவர்.

பெண் கல்வி, மதுவிலக்கு, கல்வியில் சமத்துவம் தீண்டாமை ஒழிப்பு, விதவை மணம், போன்ற சமுதாய சீர்திருத்தங்களையும் இவர் ஆதரித்தார். இன்று இளைஞர்களை சீர்குலைக்கும் மதுப்பழக்கத்தை எதிர்த்தார்.

"அன்புக்குச் சோதனை பகைவரிடத்திலே அல்லாமல் நண்பனிடத்தில் அல்ல. ஒருவன் தன் நண்பனிடத்தில் அன்பு செலுத்தும் போது, அதில் புதுமை இல்லை, சிறப்பு இல்லை, முயற்சியும் ஒன்றும் இல்லை. பகைவனிடத்தில் அன்பு செலுத்தும் போதுதான் அதற்கு உரிய உண்மையான சோதனை நடை பெறுகிறது. அப்போது தான் அது அறமாகின்றது. அதில் முயற்சியும் அமைந்துள்ளது. அதுதான் வீரச்செயல், உண்மை யான ஆண்மை" என்பது அவருடைய கருத்து.

எழுத்து , பேச்சு இந்த இரண்டையும் விடச் செயலையே தொண்டு நெறியாகக் கொள்ள வேண்டும் என்று அவர் வற்புறுத்தி வந்தார். பொதுமக்களை கவரக்கூடிய பாங்கில் பேசும் நடை பெரிதும் மதிக்கத்தக்கதே.

"நோய்" பீடிப்பதை விட துன்பம் தரக்கூடியது நோய் கொண்ட மனமே. புலன்களை அலையவிடுவது. ஆயுதங்களை பிறர்மேல் கோபம் கொண்டு தாக்கவது. வீணே பணம், பொருள் செலவழிப்பது. காலத்தையும், பொருளையும் வீணடிப்பது. அடிமை மனம் கொண்டு வருந்துவது என பல இயல்புகளை மாற்றிக் கொள்ளலாம். அண்ணலின் வாழ்க்கை எமக்கு என்றும் வழி காட்டும்.

***நல்ல நினைவுகளுடன் எதிர்காலம் தொடரட்டும்***

**செல்வி. சிவரம்யா சிவநாதன்**
**உபசெயலாளர்,**
**அகில இலங்கை காந்தி சேவா சங்கம்**

### *"காந்தியைப் பின்பற்றுவோர் அகிம்சையையும் சத்தியத்தையும் முற்றுமுழுதாக பின்பற்றுவோர்களாக இருக்கவேண்டும்" கிளிநொச்சி சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் சிவேந்திர சைதன்யா தெரிவிப்பு*

வணக்கம். காந்தி சேவா சங்க தலைவர் திரு எஸ் . கே தம்பிப்பிள்ளை ஐயா அவர்களின் கோரிக்கைக்கிணங்க காந்திநிலைய கூட்டத்தில் பங்கேற்றேன். மேற்படி கூட்டத்தில் காந்தி நிலைய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உதவ முடியுமா என்று கேட்டதற்கு இணங்க எனது கருத்துரையாக மகாத்மா காந்தி அவர்கள் அஹிம்சையையும் சத்தியத்தையும் முள்ளந்தண்டாக கருதி இருந்தார். எனவே காந்தி நிலைய அங்கத்தவர்கள், காந்தி நிலைய தொண்டர்கள், அலுவலர்கள் நிர்வாகிகள், மேற்படி செயற்பாடுகளில் முன்னின்று உழைக்கும் மாணவர்கள் அனைவரும் மகாத்மா காந்தி அவர்களின் அஹிம்சையையும் சத்தியத்தையும் முற்று முழுதாக பின்பற்றுபவர்களாக இருக்க வேண்டும். இந்த செய்தியை மேலும் மகாத்மா காந்தியின் வாழ்க்கை முறையை அவர் பின்பற்றிய வேதங்கள் உபநிடதங்கள் காட்டிய பாதையை நாம் அனைவருக்கும் விளங்கக் கூடிய வகையில் கருத்தரங்கு வாயிலாகவோ கூட்டங்களின் வாயிலாகவோ எடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்புள்ளது. இதற்கு இந்த செயல் முறையில் அடியேன் உதவுவதற்கு தயாராக உள்ளேன். போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யும் இடத்து நமது மிஷனின் செயற்பாட்டையும் நேரத்தையும் பொறுத்து உதவுவதற்கு தயாராக உள்ளோம்.

மேலும் திரு விக்டர் ஐவனின் "மறுமலர்ச்சிக்கான பாதை" எனும் புத்தகமும் நமது காந்திய கொள்கையும் வீரத்தால ஒரே நோக்கை கொண்டதாக உள்ளது அந்த வகையில் நாம் இன மத மொழி வேறுபாடுகளை மறந்து நாம் சகிப்புத்தன்மையும் பொறுமையும் அன்புமுள்ள இலங்கையர் என்ற ரீதியில் எமது கொள்கைகளாலும் அவற்றை நடை முறைப்படுத்தும் செயல் நுட்பங்களையும் கையாள வேண்டும். இதற்கு நேர்மையும் மன உறுதியும் கொள்கை பற்றுமுள்ள சமுதாயத்தை உருவாக்க வேண்டியுள்ளது. இதற்கு நாம் நமது பிரதேசங்களில் ஆங்காங்கே விழிப்புணர்வு கருத்தரங்குகளை செயல் அமர்வுகளை ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதனையும் காந்தி நிலையம் முன்னெடுக்க வேண்டும். இலங்கையின் தற்போதைய சூழலானது இன மத மொழி வேறுபாடுகளை மறந்து அனைவரும் இலங்கையர் என்ற ரீதியில் சிந்தித்து நமது பொருளாதாரத்தை கலாச்சாரத்தை கட்டி எழுப்பவேண்டிய நல்ல சூழல் காணப்படுகிறது. இதனை அரசியல் கலப்பற்ற ரீதியில் ஆன்மீக விழிப்புணர்வு ஊடாக செயற்படுத்த முயல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்மார்க்க நெறியே அண்ணலின் சமயவழி

சத்தி யத்தைத் தேவ னாகச்
சதா தொழுகை செய் தனை
சஞ் சலமுஞ் சாவும் நோவும்
சூழா மல் தடுத் தனை
சத்தெனுஞ் செம் பொருளைக் காண
சத்திய நெறியில் தவழ்ந் தனை
சனத் திடையே சமத் துவஞ்
செழித் திடவே மொழிந் தனை
சிந்த மெங்கும் நிறைந் திருந்த
தியா கத் தீபச் சுடர்
தேவ சன்னி தானத் தில்
துலங் கிடவே வைத் தனை
உத்தம மான பரம் பொருளை
உள மகிழக் காணும் மட்டும்
உறுதி யுடன் நின்றே புது
உணர்வு மலர வாழ்ந் தனை

சன் மார்க்க நெறி யேயுன்
சமய வழியென்று சாற் றினை
சயம விரோதக் கும்பல் தனைச்
சால்பு கொண்டே தாக் கினை
அன்புடை மையால் அற வளர்த்து
அறத் தினால் மறமொழித் தனை
தம்மதம் ஏற்ற மென் றவரின்
மத வெறியை மழுங்கடித் தனை
முன் னோனை வழிபடு முறைமையை
மக்கட் கண் பதியவைத் தனை
மதங்கள் மறு மலர்ச்சி யெய்த
முழு மூச்சுடன் முன்னின் றனை
வன் கொடுமை மூடபக்தியால் மதம்
வசைக் குளானதைக் கண்டித் தனை
வஞ் சித்தல் கெடுத்தலால் விளைந்த
வாமப் பெயரழிவை விலக் கினை.

*கவிஞர் மணிமன்றன்,*
*யாழ்ப்பாணம்*


# குழந்தைகளுக்கு காந்தி

## நூல் அறிமுகம்

மகாத்மா காந்தியின் உன்னதமான வரலாற்றை குழந்தைகளும் புரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில் எளிய நடையில் இந்த நூல் எழுதப்பட்டு இருக்கிறது. நூலின் இறுதிப் பகுதியில் மகாத்மாவை அறிந்து கொள்வோம் என்று வினா – விடை வழவில் தகவல்களைத் தந்து இருப்பதைப் பாராட்டலாம்.

ஆசிரியர்: கு. குழந்தைசாமி
காந்தி அமைதி நிறுவனம்

# 153 ஆவது காந்தி ஜெயந்தி



மகாத்மா காந்தியடிகளின் 153ஆவது பிறந்த தினம் இன்று (02.10.2022) கொண்டாடப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் அகில இலங்கை காந்தி சேவா சங்கம் யாழ் இந்திய துணைத் தூதரகத்துடன் இணைத்து காந்தி ஜெயந்தி தினத்தை அனுஷ்டிக்கின்றது. யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ள காந்தி சிலைகளுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்படும். பிரதான நிகழ்வு யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள காந்தி உருவச் சிலையடியில் (காகில்ஸ் சதுக்கம்) இடம்பெறும். அங்கு "காந்தீயம்" பத்திரிகையும் வெளியிட்டு வைக்கப்படும்.

இதே வேளை கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி நிலையத்திலும் (சிறுவர் இல்லம்) காந்தி ஜெயந்தி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. ஜெயந்தி நிகழ்வுகள் கி. விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ளன. அத்துடன் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டும் அங்கு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# யாழ்ப்பாண முதல்வருக்கு காந்திசேவா சங்கத் தலைவரின் மடல்

## "தமிழ்ச் சமூகத்திற்கு வலுவுள்ள ஆன்மீகத் தலைவர் தேவை" என்ற யாழ் முதல்வரின் கருத்துக்கு காந்திசேவா சங்கத் தலைவரின் பதில்

தாங்கள் கூறியதை பத்திரிகை மூலமாக அறிந்து கொண்டோம். நல்ல சிந்தனை! ஆன்மீகத்தலைவரோடு தேசியத் தலைவரும் தேவை. மகாத்மா காந்தியடிகள் ஆன்மீகத் தலைவராகவும் தேசியத் தலைவராகவும் மக்களுக்குச் சேவை செய்தார். இவருடைய சீடர் வினோபா அடிகளும் ஆசிரமம் அமைத்து சிறந்த சேவை செய்தார். இவர்கள் எங்களுக்கு வழிகாட்டியாக இருக்கின்றனர். ஆகவே அவர்களுடைய வழியில் ஆசிரமம் அமைத்து செயலாற்றுவது சிரமமாக இருக்காது. அறிவியல் வேகமாக வளர்ந்து கொண்டே போகிறது. இதனை கட்டுப்படுத்தாதிருந்தால் உலகம் பேரழிவை சந்திக்க நேரிடும். ஆன்மீகவியல் மூலமே அறிவியலைக் கட்டுப்படுத்த முடியும்.

தங்களுக்கு வசதி இருந்தால் இங்கு மகாத்மா காந்தி ஆசிரமம் (பிருந்தாவனம் சிவபுரம், பூநகரி) வருகை தந்து பார்வையிடலாம். தங்களைச் சந்திக்குமாறு "காந்தீயம்" ஆசிரியர் திரு.எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி அவர்களுக்கு அறிவித்துள்ளோம். அவருடைய தொலைபேசி: 077 6624377 தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் வேண்டுகின்றோம். வாழ்க.

அன்புள்ள
சோ.க. தம்பிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதநாடு பெற்றெடுத்த உத்தமர் மகாத்மா காந்தி

## (02.10.1869 - 30.01.1948)

- க. செல்வக்குமாரன் M.A
ஓய்வு நிலை அதிபர்,(கந்தரோடை)

எவரும் எதிர்பாராத விதமாக இந்திய விடுதலைப் போராட்டத்தை அகிம்சையை ஆயுதமாக ஏந்தி வெற்றிகண்ட செயல்வீரன் மகாத்மா காந்தியடிகள். காந்தியடிகள் மறைந்தபின்பே உலக மக்கள் அவரது கொள்கைகளான அகிம்சை , சத்தியம் , உண்மை சகல மதமும் சமம், சகல மக்களும் சமம் முதலியவற்றாலும் அவரது எளிமை, சிக்கனம் , தன்னம்பிக்கை, விடாமுயற்சி, தொழில் மகத்துவத்தை மதித்தல், இறைநம்பிக்கை என்பனவும் காரணமாகவும் உலக மக்கள் அவரைப்பற்றியும், அவரது செயற்பாடுகளையும் அதிகமாக அறிய முற்பட்டனர். பின்பற்றவும் ஆரம்பித்தனர். தான் வாழ்ந்த காலத்தில் சமூகத்தில் பல வகிபாகங்களை வகித்தவர். ஒரு வக்கீல் (சட்டத்தரணி –பரீஸ்டர்), அரசியல்வாதி, தத்துவியலாளர், சமாதான செயற்பாட்டாளர், ஆசிரியர், ஆய்வாளர், செருப்புக் கட்டுபவர், பத்திரிகை ஆசிரியர், நூல் ஆசிரியர், ஆன்மீக வாதி, தோட்டி, கட்டுரையாளர் என இன்னும் பலவாகும்.

காந்தியடிகளைப் பற்றி 25,000 இற்கும் மேற்பட்ட நூல்கள் பல்வேறு மொழிகளிலும் வெளியிடப்பட்டன. காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்று நூல்கள், காந்திய கொள்கை விளக்கநூல்கள், சித்திரக்கதைகள், கவிதைகள், நாடகங்கள், திரைப்படங்கள், இறுவெட்டுக்கள் , மொழி பெயர்ப்பு நூல்கள் என பல்வேறு வகையான நூல்கள் உள்ளடங்குகின்றன. காந்தியடிகளின் மறைவுக்குப் பின் இந்தியா இலங்கை உட்பட உலகநாடுகளில் அந்த நாட்டு மக்கள் காந்தியடிகளின் மேன்மையான செயற்பாடுகளை தன்னலமற்று செய்ததை நன்றி கூறும் விதமாகவும் நினைவு கூரும் விதமாகவும் காந்தியடிகளின் சிலைகளை அமைத்தனர், வீதிகள் ,கிராமங்கள், மண்டபங்கள் முதலியவற்றிற்கு காந்தியடிகளின் பெயரைச் சூட்டினர். உருவப்படங்களை அலுவலகங்கள், மண்டபங்களில் தொங்க விட்டு அஞ்சலி செலுத்துகின்றனர். காந்தியடிகளின் பொன்மொழிகளை பொது இடங்களில் காண முடிகிறது. காந்தியடிகள் கூறிய விடயங்கள் (சொற்கள்) 100 பெரிய தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இவ்வளவு பெருமைகளை கொண்ட மகாத்மாவை பலர் தெய்வமாக கருதினர்.

கற்றோர், கல்லாதோர், ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடுகள் இன்றி "மகாத்மா" என்று மதிப்புடன் அழைக்கின்றனர். காந்தியடிகளை "பாபு" என்றும் (குஜராத் மொழியில் பாபு என்பதன் பொருள் தந்தை) அழைத்தனர். மேலும் " இந்திய நாட்டின் தந்தை" (தேசபிதா) என்றும் அழைக்கப்பட்டார். சர்வதேச நாடுகளும் தலைவர்களும் இவரது அகிம்சை கொள்கையை அங்கீகரித்ததுடன் காந்தியடிகள் பிறந்த தினமான அக்ரோபர் 02 ஆந் திகதியை ஐக்கிய நாடுகள் சபையில் சர்வதேச அகிம்சை தினமாக பிரகடனப்படுத்தி இன்று வருடந்தோறும் இது ஒரு தேசிய விழாவாக அங்கத்தவ நாடுகளினால் கொண்டாடப்படுகிறது. காந்தியடிகளுக்கு இறந்தபின் நோபல் பரிசு வழங்கு வதற்கு எத்தனித்த போது அவர் தனக்கென வாரிசுகளின் பெயரை எழுதி வைக்காத தன் காரணமாக அது வழங்கப்படவில்லை. காந்தியடிகள் பிறந்த அக்ரோபர் 02 ஆந் திகதி இந்தியாவின் தேசிய விடுமுறையாக உள்ளது.


எம்மால் போற்றப்படும் உத்தமரின் பிறந்த இடம், மாநிலம், குடும்பம், பிறப்பு, கல்வி , தொழில் தென் ஆபிரிக்காவிலும் இந்தியாவிலும் மேற்கொண்ட செயற்பாடுகள் அவரது இறுதிக்காலம் என்பவற்றை தொடர்கட்டுரையாக வழங்குவதற்கு காந்தியடிகளின் ஆசியை வேண்டி நிற்கின்றேன்.

### காந்தியடிகள் பிறந்த மாநிலத்தின் சிறப்பு

இவர் குஜராத் மாநிலத்தில் 02.10.1869 ஆந் திகதி பிறந்தார். இந்த மாநிலத்திற்கு குஜராத் என்ற பெயர் வரக்காரணம் இங்கு முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த Gujjars குஜார்ஸ் என அழைக்கப்பட்ட பழங்குடி மக்கள் வாழ்ந்தமையாகும்.

இந்திய சுதந்திரம் கிடைத்தாலும் அப்போது 562 மன்னர்களின் தனி இராச்சிய பிரிவுகள் காணப்பட்டன. அவற்றை சர்தார் பட்டேல் மன்னர்களின் சம்மத்துடன் ஒன்றாக இணைத்து "இந்தியா" என்ற இந்திய குடியரசை உருவாக்க உழைத்து வெற்றி கண்டவர்.

இந்த கடினமான பணியை மேற்கொண்ட காந்தியவாதியும் பதில் பிரதமருமான தலைவருமான வல்லபாய் பட்டேலுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக அவரின் உருவச்சிலை நிறுவப்பட்டது. உயரம் 182 மீற்றர் ஏற்பட்ட செலவு 3000 கோடி ரூபா.




மகாத்மா காந்தி பிறந்த இடமான குஜராத் மாநிலம்

இந்தியாவில் உள்ள 33 மாநிலங்களில் இதுவும் ஒன்றாகும். இந்தியாவின் வடமேற்குப் பக்கமாக காணப்படுகிறது. 1960 இற்கு முன் இது வடமேற்கு மாநிலம் என கருதப்பட்டது. வரலாற்றுக் காலத்தில் Gurjaratra or Gurjarabhumi என அழைக்கப்பட்டது. 01.05.1960 ஆந் திகதி குஜராத் மாநிலம் உருவாக்கப்பட்டது. பம்பாய் மாகாணத்தின் ஒரு பகுதியும் மகாரஷ்டிராவின் ஒரு பகுதியும் சேர்க்கப்பட்டு ஒரே மாநிலமாக உருவானது. இந்திய மாநிலங்கள் மொழி அடிப்படையிலும் பிரிக்கப்பட்டிருந்தன. 1600km நீளமான கடற்கரை காணப்படுகின்றது. சிறந்த உப்பு விளையு மிடங்களும் உள்ளன. இந்த மாநிலத்தின் வடக்காக நர்மதா நதி பாய்கிறது. வடகிழக்கு எல்லையாக ராஜஸ்தான், டட்றா, நாகா ஹவலி டடமன், டியூ ஆகியவையும், தெற்கெல்லையாக மகாராஸ்டிராவும் மேற்கெல்லைகளாக அரேபிய கடலும், பாக்கிஸ்தானின் சிந்து மாகாணமும் காணப்படுகின்றன. இதன் நிலப்பரப்பு 196024 சதுர கி.மீ. **தலைநகராக காந்திநகர்** விளங்குகிறது. மக்கள் தொகை 60439692 .இந்தியாவில் மக்கள் தொகை கூடிய மாநிலங்களில் ஒன்பதாவது இடத்தை வகிக்கின்றது. ஆனால் ஐந்தாவது பெரிய மாநிலமாக விளங்குகிறது. இங்குள்ள பெரிய நகரம் அகமதாபாத் ஆகும். உள்நாட்டு மொழியாகவும் உள்நாட்டு அரச மொழியாகவும் இருப்பது குஜராத்தி எனினும் ஆங்கிலம், ஹிந்தி, மராட்டி, அரபு, உட்பட இன்னும் பல மொழிகள் பேசப்படுகின்றன.

சமய பன்மியமும் காணப்படுகிறது. இந்து சமயமும் அதன் பிரிவான வைணவ சமயமும், புத்த சமயம், இஸ்லாம், கிறிஸ்தவம், பாசி, சமணம் என்பன பிரதான சமயங்களாகவும் வேறு சமயங்களும் உள்ளன. சமய நம்பிக்கை கொண்ட மக்களாகவுள்ளனர். எல்லா சமயத்தவர்களும் வழிபடும் ஆலயங்கள், தேவாலயங் கள் என்பன எழில்மிகு கலை அம்சத்துடன் காணப்படுகிறது.

அடுத்த இதழில் தொடரும்....

**அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பணிகளுக்கு நிதி உதவி செய்ய விரும்பும் அன்பர்கள் சங்கத்தின் வங்கிக் கணக்குக்கு அனுப்பி உதவுக.**



**அகில இலங்கை காந்தி சேவா சங்கம்
சேமிப்புக் கணக்கு இலக்கம் : 117599
இலங்கை வங்கி
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.**

இப்பத்திரிகை D8 உருத்திரபுரம், கிளிநொச்சியிலுள்ள அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக திரு. சோ. க. தம்பிப்பிள்ளை அவர்களால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதி, இலக்கம் 717இல் அமைந்துள்ள **தீபம் பதிப்பகத்தில்** 2022 ஆம் ஆண்டு அக்டோபர் **மாதம் 02 ஆம் திகதி** அச்சிட்டு வெளியிடப்பட்டது.
**இதழாசிரியர் : எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி B.F.A, PGDE, Dip.in Community Development & Management, Certificate in Human Rights, M.A(Gandhian Thought), M.Ed**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org